பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 26 சனிக்கிழமை 08.02.2025 கதிர் 092

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசாவின் இறப்பை வைத்து அரசியல் செய்ய முயன்றவர்கள் தொடர்பில் வெளிச்சத்துக்குக் ☞2

# எம்மை 'மலையகத் தமிழர்கள்' என்றே ஆவணங்களில் அடையாளப்படுத்துக

## மலையக சிவில் அமைப்புக்கள் வலியுறுத்து

பெருந்தோட்டத் தொழிலாளர்களாக இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட தமிழர்களின் வழித்தோன்றல்களை 'மலையகத் தமிழர்கள்' என்று எல்லா ஆவணங்களிலும் அடையாளப்படுத்துமாறு மலையக குடிமைச் சமூகங்கள் (சிவில் சொசைட்டிஸ்) வலியுறுத்தியுள்ளன.

''மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு 200 ஆண்டுகள் கடந்துள்ளன. சனத்தொகை மதிப்பீட்டு ஆவணத்தில் அவர்கள் 'மலையகத்தமிழர்கள்' என அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும், பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்டவற்றில் அவ்வாறு அடையாளப்படுத்த முடியாத நிலைமையே காணப்படுகிறது. எனவே அந்த மக்களை சகல ஆவணங்களிலும் 'மலையகத் தமிழர்கள்' என அடையாளப்படுத்துமாறு ஆளும்தரப்பு சுற்றறிக்கையின் ஊடாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கவேண்டும்" என சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றதிகாரி முத்துலிங்கம் வலியுறுத்தினார்.

கண்டி - சமூக அபிவிருத்தி நிறுவனம் மற்றும் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து மலையகத் தமிழ் சமூகம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்துறை என்பவற்றின் சமூக, பொருளாதார ☞2

## மின் தாக்கி 6 வயதுச் சிறுமி வவுனியாவில் பரிதாபச் சாவு

வவுனியா மாவட்டம், புளியங்குளத்தில் மின்சாரம் தாக்கி 6 வயதுச் சிறுமி ஒருத்தி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

வீட்டிலிருந்த கொய்யா ☞2

## மினுவாங்கொடையில் ஒருவர் சுட்டுக்கொலை

மினுவாங்கொடையில் நேற்றிரவு 35 வயதுடைய ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு துப்பாக்கிதாரிகள் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர்.

சம்பவம் குறித்து பொலீசார் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

## சாரதி மீது வாள்வெட்டு



இலங்கை போக்குவரத்து சபை பேருந்து சாரதி மீது விசுவமடு பகுதியில் வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் பயணிகள் நடுவீதியில் நிர்க்கதி நிலையில் விடப்பட்டனர்

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணிகளை ஏற்றிச்சென்ற இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துச் சாரதி மீதே இந்தத் தாக்குதல் ☞2

# இலங்கையின் பாதுகாப்புக்கு அசைக்கவே முடியாத ஆதரவு

## இந்தியா உறுதியளிப்பு

**இலங்கையின் தேசியப் பாதுகாப்பை உறுதி செய்வதில், குறிப்பாகப் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் இந்தியா அசைக்க முடியாத ஆதரவை வழங்கும் என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உறுதியளித்தார்.**

**இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜா**




**மற்றும் பாதுகாப்பு செயலாளர்** ☞2

## லசந்த கொலை வழக்கில் மீண்டும் குற்றப் பத்திரிகை

### பிரதமர் சபையில் அறிவிப்பு

2008 ஆம் ஆண்டு பத்திரிகையாளர் லசந்த விக்ரமதுங்கே கொலை செய்யப்பட்ட வழக்கில் மீண்டும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று பிரதமர் (பிரதமர்) ஹரிணி நேற்று நாடாளுமன்றத்தில் உறுதியளித்தார். ☞2

### லசந்த கொலைச் சந்தேநபர்கள் விடுவிப்பு குறித்து

## சட்டமா அதிபர் அலுவலகம் விளக்கம்

பத்திரிகையாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பாக மூன்று சந்தேகநபர்கள் விடுவிக்கப்பட்டதாக சமீபத்தில் வெளியான செய்திகளைக் குறிப்பிட்டு, சட்டமா அதிபர் (புறூ) துறை, இந்த முடிவு விக்ரமதுங்கவின் ஓட்டுநர் கடத்தப்பட்டது தொடர்பான தனி வழக்கு தொடர்பானது என்று தெளிவுபடுத்தியது.

ஒரு அறிக்கையில், கொலை விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், இன்னும் முடிவுக்கு வரவில்லை என்றும் புறூ துறை வலியுறுத்தியது.

கடத்தல் வழக்கு அதே வழக்கு எண்ணின் (92/2009) கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இது சந்தேக நபர்களின் விடுதலையின் தன்மை குறித்து குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அது மேலும் விளக்கியது.

அந்த அறிக்கையின்படி, சந்தேகநபர்களில் ஒருவரான பிரேம்ஆனந்த உடலகமவுக்கு எதிராக வழக்குத் தொடர ☞7

## மின்சார சபைப் பொறியியலாளர் சங்கம் ஒரு மாபியா போன்று செயற்படுகின்றது

### ஹேஷா விதானகே எம்.பி. குற்றச்சாட்டு

மின்சாரப் பொறியியலாளர்கள் சங்கமே பிரதான மின்மாபியாவாகச் செயற்படுகிறது இவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்னவென்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

மின்சார சபை தொடர்பில் வாய்மூல விடைக்கான வினாக்களின் போது முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு மின்சாரத்துறை அமைச்சர் குமார ஜயகொடி பதிலளித்தார்,

''இலங்கை மின்சார சபையில் 22,135 நிரந்தர ஊழியர்களும், ஒப்பந்த அடிப்படையில் 95 ஊழியர்களும், தற்காலிக அடிப்படையில் 150 ஊழியர்களும், என்.வி.க்யூ. பயிற்சி அடிப்படையில் 25 ஊழியர்களும், சக்தி வலு நிறுவனத்தின் 56 ஊழியர்களும் பணிபுரிகிறார்கள்.

மின்கம்பிகளை இழுத்தல், குழிகளைத் தோண்டுதல் மற்றும் மின் இணைப்பைத் துண்டித்தல் போன்ற பணிகள் ஒப்பந்த நிறுவனங்களுக்கு ☞2

## 2024 மின்சார சபைச் சட்டத்தை உடனடியாகச் செயலற்றதாக்குக

### எதிர்க் கட்சித் தலைவர் நாடாளுமன்றத்தில் வலியுறுத்து

நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமெனில் 2024ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க மின்சார சட்டத்தை உடனடியாக செயலிழக்கச் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

அவர் நேற்று நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையை வெளியிட்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிதததாவது:

2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சட்டத்தின் கீழ் இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு நிறுவப்பட்டது.

இது நாட்டின் மின்சார துறை, பெற்றோலிய துறை மற்றும் நீர் சேவை ☞2

## மீண்டும் எழுச்சிபெற ஜனாதிபதி ஏற்றுமதியாளர்களுக்கு அழைப்பு

வலுவான பொருளாதார அடித்தளத்திலிருந்து மீண்டும் எழுச்சி பெற ஏற்றுமதியாளர்களுக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அழைப்பு விடுத்தார்.

"மிகவும் வலுவான நிலையில் இருந்து சந்தையைக் கைப்பற்றும் சவாலை நாம் எதிர்கொள்ளாததால், வேறொரு தரப்பிலிருந்து ஆதரவைப் பெற வேண்டியிருந்தது. தற்போது இருக்கும் பொருளாதார உறுதிப்பாடான நிலமையில் இருந்து மீண்டும் எழுச்சி பெற ஆளும்தரப்புத் தனது ஆதரவை வழங்கத் தயாராக இருக்கின்றது" எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஏற்றுமதி விருது வழங்கும் ☞7

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

கொண்டுவருவதற்கான முயற்சிகளைக் கட்சி தொடங்கி விட்டது. விரைவில் இதன் பின்னணியில் இருந்தவர்கள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் பாயும் என்று எதிர்பார்க்கலாம். அதற்கு முன்னோடியாக மாவையின் இறுதிக் கிரியை நடந்த சுடுகாட்டில் 'துரோகிகள்' பனர் அடித்துத் தொங்கவிட்டவர்கள் யார் என்பது குறித்து மாவையின் மகன் கலையமுதனிடம் பொலிஸார் நேற்று விசாரணை நடத்தியுள்ளனர்.

கட்சியின் தற்போதைய தலைவர் சிவஞானம் வழங்கிய -முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது. காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இறுதி நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நடந்தது. பூதவுடல் தகனம் செய்யப்பட்ட தச்சன்காடு இந்து மயானத்தில் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் வடக்கு, கிழக்கு தமிழர்களின் சார்பில் என்ற அநாமதேயப் பெயரில் 'மாவையின் இறப்பிற்குக் காரணமான தமிழினத்தின் தமிழரசுக் கட்சியின் துரோகிகள்' என்னும் தலைப்பிடப்பட்ட பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அதில் 14 பேரின் படங்கள் இருந்தன. கட்சித் தலைவர் சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உள்ளிட்ட கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் 14 பேரின் படங்கள் அவை.

சுமந்திரன், சேயோன், பீற்றர் இளஞ்செழியன், சாணக்கியன், ரஞ்சினி, கலையரசன், சத்தியலிங்கம், சயந்தன், குலநாயகம், துரைராஜசிங்கம், சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, கமலேஸ்வரன், இரத்தினவேல், கண்ணதாசன், சேனாதிராசா, பரஞ்சோதி, செல்வராசா ஆகியோரின் பெயர்களே காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இதில் கண்ணதாசன் மற்றும் சேனாதிராசா ஆகியோரின் படங்கள் போடப்படவில்லை. பதிலாக மண்டையோட்டுப் படங்கள் போடப்பட்டிருந்தன. ரவிகரனின் படத்தைப் போட்டு கண்ணதாசன் என்று பெயரிடப்பட்டிருந்தது.

மாவையை தலைவர் பதவியில் இருந்து அகற்றுவதற்கு முன்னின்றவர்கள் என்ற அடிப்படையில் இவர்களே மாவையின் இறப்பிற்குக் காரணமானவர்கள் என்ற கதை முன்னரே பரப்பப்பட்டது. இதன் பின்னணியில் கட்சித் தலைவர் பதவியில் காதல் கொண்டிருக்கும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் மகனும் மாவையின் குடும்பத்தவர்கள் சிலரும் இருந்தனர் என்ற குற்றச்சாட்டு உண்டு.

அப்பதாகை காட்சிப்படுத்தப்பட்டமையின் காரணமாக தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கலாம் என்ற அச்சம் காணப்பட்ட நிலையில், தன்னால் மாவையின் இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்கேற்க முடியாது போனதாகவும், ஆகவே குறித்த பதாகையைக் காட்சிப்படுத்தியவர்கள் தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுக்குமாறும் கட்சித் தலைவர் சிவஞானம் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓய்வு பெற்ற எயர் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா ஆகியோருக்கிடையில் நேற்று நடந்த சந்திப்பின்போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதில் இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டதோடு, பண்டைய வரலாற்றிலிருந்து பிணைந்திருக்கும் இந்திய - இலங்கை இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பிராந்திய பாதுகாப்பு மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு மூலம் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர் என்று பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்தது.

இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில், குறிப்பாகப் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், கடல்சார் பாதுகாப்பு சவால்கள் மற்றும் அவசரகால பேரிடர் சூழ்நிலைகளுக்கு பதிலளிப்பதில் இந்தியாவின் அசைக்க முடியாத ஆதரவை இந்திய உயர் ஸ்தானிகர் உறுதிப்படுத்தினார்.

இந்தியா இன்றுவரை வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவுக்கு பாதுகாப்பு செயலாளர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். மேலும் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்திய - இலங்கை பாதுகாப்பு கூட்டாண்மையின் முக்கிய பங்கையும் உறுதிப்படுத்தினார். பாதுகாப்பு அமைச்சின் இராணுவத் தொடர்பு அதிகாரியும் இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டார்.

## எம்மை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பை விருத்தி செய்வதற்காக பிரதமர் ஹரிணி அமரசூரிய, பெருந்தோட்ட அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் உள்ளிட்டோருக்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளன.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் முத்துலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:

மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு 200 வருடங்கள் கடந்துள்ளன. அதற்காக பல்வேறு நிகழ்வுகள் கூட ஏற்பாடு செய்யப்பட்டன. அதற்கமைய கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம் மலையக மக்களின் 200 வருட வரலாற்றை நினைவுகூரும் வகையில் நுவரெலியாவில் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்ததோடு, அந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த ஏற்புரைகளையும் ஆளும் தரப்பிடம் கையளித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின்போது மலையக மக்களின் பிரச்சினைகள் குறித்த முன்மொழிவுகளைத் தேர்தல்களில் போட்டியிட்ட வேட்பாளர்களிடமும் கட்சிகளிடமும் கையளித்திருந்தோம். இந்நிலையிலேயே கடந்த ஜனவரி 30 பிரதமர் ஹரிணியைச் சந்தித்து அந்த முன்மொழிவுகளில் நிறைவேற்றக்கூடிய சில பரிந்துரைகள் தொடர்பில் எடுத்துரைத்திருந்தோம்.

இந்தப் பரிந்துரைகள் பெருந்தோட்ட அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கும் கையளிக்கப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள அந்த மக்களுக்காகச் சட்ட ரீதியில் இலகுவாக நிறைவேற்றக்கூடிய யோசனைகளையே பரிந்துரைத்துள்ளோம். அந்த வகையில் 200 ஆண்டுகள் இலங்கையில் வாழும் பிரஜைகள் என்ற அடிப்படையில் அந்த மக்கள் தம்மை 'மலையகத் தமிழர்கள்' என அடையாளப் படுத்திக் கொள்ளவே விரும்புகின்றனர்.

கடந்த காலங்களில் பல தரப்பினரால் வலியுறுத்தப்பட்டதற்கமைய தற்போதைய சனத்தொகை மதிப்பீட்டு ஆவணத்தில் 'இந்திய வம்சாவளி தமிழர்' என்ற சொற் பதத்துக்கு அருகில் 'மலையகத் தமிழர்' என்ற சொற்பதமும் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போதும் மலையகப் பகுதிகளில் குழந்தைகள் பிறந்த பின்னர் பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும்போது 'மலையகத் தமிழர்' என்று அடையாளப்படுத்திக்கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகிறது. எனவே சனத்தொகை மதிப்பீட்டு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டதைப் போன்று ஏனைய சகல அரச ஆவணங்களிலும் 'மலையகத் தமிழர்' என அடையாளப்படுத்துமாறு ஆளும் தரப்பு சகல அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கும் சுற்றறிக்கையின் ஊடாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கவேண்டும்.

அதற்கமைய பிறப்பு பதிவு மற்றும் திருமணப் பதிவு உள்ளிட்ட முக்கிய சந்தர்ப்பங்களில் அவர்களை 'மலையகத் தமிழர்' என அடையாளப்படுத்த வாய்ப்பளிக்குமாறு கோருகின்றோம் - என்றார்.

## சாரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டுள்ளது. விசுவமடுப் பகுதியில் வைத்து இனந்தெரியாதநபர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

வாள்வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாரதி படுகாயங்களுடன் தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

பயணிகளை இறக்குவதற்காக தரிப்பிடத்தில் பேருந்தை நிறுத்தியபோது, அங்கு காத்திருந்த வாள்வெட்டுக் கும்பல் பேருந்துக்குள் நுழைந்து சாரதியைத் தாக்கியதாகப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தால் பயணிகள் நடுத்தெருவில் நிற்கவேண்டிய அவலம் ஏற்பட்டது .(316)

## லசந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவைப்பட்டால் புதிய விசாரணையைத் தொடங்குவது குறித்தும் தமது ஆளும் தரப்புப் பரிசீலிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேங்கிக் கிடக்கும் வழக்கு குறித்து எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளைத் தொடர்ந்து பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

'நீதியை வழங்குவதில் நடைமுறைகள் குறுக்கிட்டால், அந்த நடைமுறைகளை நாம் மறுபரிசீலனை செய்யவேண்டும்' என்று அவர் கூறினார்.

சட்ட நிறுவனங்களுக்குள் உள்ள முறையான சவால்களை ஒப்புக்கொண்டாலும், மாற்றம் அவசியம் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் காலவரையின்றி காத்திருக்க விடப்படக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

'இது மிகவும் உணர்திறன் வாய்ந்த பிரச்சினை, இதன் தீவிரத்தை நாங்கள் முழுமையாக அறிவோம். எங்கள் அதிகாரத்திற்கு உட்பட்ட அனைத்தையும் நாங்கள் செய்வோம். கூடுதலாக, இந்த விஷயத்தை நிவர்த்தி செய்ய ஒரு முழு நாள் நாடாளுமன்ற விவாதத்தை ஒதுக்க நாங்கள் தயாராக உள்ளோம், ஏனெனில் அதன் மிக முக்கியமான முக்கியத்துவத்தை நாங்கள் உணர்கிறோம்,' என்று அவர் உறுதிப்படுத்தினார்.

மேலும் கருத்து தெரிவித்த பிரதமர், 'சட்டமா அதிபர் அலுவலகம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களில், நல்ல நோக்கங்களைக் கொண்ட அதிகாரிகள் இருந்தாலும், அவர்கள் ஒரு குறிப்பிட்ட வேலை முறைக்கு பழகிவிட்டார்கள், அவர்கள் ஒரு குறிப்பிட்ட கலாசாரத்திற்குள் பணியாற்றியுள்ளனர் என்பதை மறந்துவிடக்கூடாது.

அதுவும் மாறவேண்டும். அதற்கு நேரம் எடுக்கும், ஆனால் நேரம் எடுப்பது என்பது பாதிக்கப்பட்டவர்கள் பதில்களுக்காக என்றென்றும் காத்திருக்க முடியும் என்று அர்த்தமல்ல.'- என்றார்.

## மின் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரத்தில் ஏறி விளையாடிய சிறுமி அதிலிருந்து தவறி விழுந்தபோது, நீர் இறைக்கும் இயந்திரத்தோடு பொருத்தப்பட்டிருந்த மின்சார வயரில் சிக்குண்டதில் மின்சாரம் தாக்கியதாகப் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

சிறுமியை வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்து விரைந்தபோதும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

## 2024 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறையை ஒழுங்குபடுத்துவதற்காக ஆகும். பின்னர் 2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டம் அமுலுக்கு வந்த பின்னர், மின்சாரத் துறையை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரங்கள் இந்த ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டன.

மின்சாரத் துறையின் பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் அன்றிலிருந்து ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டன.

எவ்வாறாயினும் 2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டம் மற்றும் 2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் செயல்படும் பொறிமுறையின் கீழ், கொள்கை வகுத்தல் பணி அமைச்சிற்கும், ஒழுங்குபடுத்தல் பணி இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கும், உரிமம் பெற்றவர்களின் பொறுப்புகள் இலங்கை மின்சார சபை உள்ளிட்ட உரிமம் பெற்றவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. எனினும், 2024 ஜூன் 27ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட 2024ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரத் துறை சட்டமானது, இதுவரை தெளிவாக செயல்பட்டு வந்த கொள்கை வகுத்தல் பணிகள், ஒழுங்குபடுத்தல் பணிகள் மற்றும் உரிமம் பெற்றவர்களின் பணிகளை குழப்பமான முறையில் சிக்கலாக்கி, மின்சார துறையின் ஒழுங்குபடுத்தலில் இதுவரை இருந்த தெளிவான செயல்முறையை சிக்கலான நிலைக்கு தள்ளும் சட்டக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

இதற்கிடையில், 2024 ஜூன் 27 நிறைவேற்றப்பட்ட இந்த புதிய சட்டம் 2025 ஜூன் மாதத்தில் முழுமையாக நடைமுறைக்கு வரவுள்ளது.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால், தற்போது நடைமுறையில் உள்ள 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தில் உள்ள துறையின் முன்னேற்றத்திற்கு மிக அவசியமான அம்சங்கள் நீக்கப்படும்.

நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் உரிமைகளுக்கான ஏற்கனவே இருந்த ஏற்பாடுகளை நீக்குதல், தொடர்ச்சியான மின் விநியோகத்திற்கான ஏற்பாடுகளை நீக்குதல்.

அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட குறைந்த செலவு உற்பத்தித் திட்டம் இந்த வரைவின் மூலம் நீக்கப்படும், அதன்படி உற்பத்தித் திட்டத்தை அங்கீகரிக்கும் அதிகாரம் அமைச்சுக்கு வழங்கப்படும்.

புதுப்பிக்கத்தக்க மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் கொள்வனவு செய்யும் கட்டணத்தை தீர்மானிக்கும் அதிகாரமும் அமைச்சுக்கு வழங்கப்படும்.

மக்கள் கருத்துக்களின் அடிப்படையில் நியாயமான செலவின் அடிப்படையில் மின் கட்டணத்தை தீர்மானிப்பதற்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு இருந்த அதிகாரங்கள் அமைச்சருக்கும் அவரால் நியமிக்கப்படும் குழுவிற்கும் மாற்றப்படும்.

சமீபத்தில் தற்போதைய மின்வலு அமைச்சர் நாடாளுமன்றத்தில் மின் கட்டணங்களை 37 சதவீத உயர்த்த வேண்டும் என கூறினாலும், பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு நாட்டின் மின் நுகர்வோருக்கு 20 சதவீதக் கட்டணக் குறைப்பை மேற்கொண்டது 2009 ஆம் ஆண்டு சட்டத்தின் மூலம் கிடைத்த அதிகாரங்களின் காரணமாகும்.

எதிர்காலத்தில் 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், இலங்கை மின்சார சபை மற்றும் மின்சார அமைச்சின் அதிகாரிகளின் விருப்பப்படி மின் கட்டணங்கள் தீர்மானிக்கப்படும், இதன் மூலம் மின் நுகர்வோரை சுரண்டும் முறைமை உருவாகும். தற்போதைய ஆளும் தரப்பின் 'வளமான நாடு - அழகான வாழ்க்கை' கொள்கை அறிக்கையில் உள்ள வாக்குறுதிகளை இந்த தருணத்தில் நினைவுபடுத்துவது முக்கியம்.

அதற்கமைய 2024 ஜூன் 27 மின்சார சட்டத்தை இரத்து செய்வதற்கும், மின்சார துறைக்கான புதிய முற்போக்கான சட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கும், மேலும் அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி பெற்றோலிய துறையை ஒழுங்குபடுத்த இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கும் புதிய துறைசட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் எதிர்க்கட்சியாக நாம் அரசாங்கத்தை தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

## மின்சார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளன. செலவுகளைக் குறைப்பதற்காகவே இந்தப் பணிகள் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

மின்சார சபையில் பல குறைப்பாடுகள் மற்றும் சிக்கல்கள் காணப்படுவதை ஏற்றுக்கொள்கிறோம். மின் விளக்கை ஒளிரச் செய்து, அணைப்பதைப் போன்று இந்த பிரச்சினைகளுக்கு உடன் தீர்வுகாண முடியாது. ஏனெனில் சேவையாளர்களுடன் இந்தப்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# நெல்லுக்கான விலை உரியநேரத்தில் நிர்ணயிக்கப்படவில்லை தற்போதுநிர்ணயிக்கப்பட்ட விலையும் போதுமானதாக இல்லை

## விவசாயிகள் விசனம்

தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும்போக அறுவடை நிறைவடையும் நிலையில் அரசாங்கத்தால் நெல்லுக்கான விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் சிவப்பு நெல்லுக்கு 120 ரூபாவும் சம்பா நெல்லுக்கு 125 ரூபாவாகவும் கீரிச்சம்பா நெல்லுக்கான விலை 132 ரூபாவாகவும் அரசாங்கத்தினால்; நிர்ணகிக்கப்பட்டுள்ளது தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை நிறைவடைந்து வரும் நிலையில் நெல்லுக்கான விலை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தற்பொழுது மழை வெள்ளத்தில் ஈரமான நெல்லினையே 8000 ரூபாவுக்கு விற்பனை செய்யக்கூடியதாக வயல்களிலே வந்து தனியார் கொள்வனவு செய்கின்றனர்.

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு எம்மால் கொண்டு சென்று அங்கு வழங்க வேண்டிய நிலை உள்ளது விவசாயிகளாகிய எமக்கு இம்முறை பாரிய மழை வெள்ளம் மற்றும் நோய் தாக்கம் காரணமாக அழிவை ஏற்படுத்தி உள்ளது.






இந்நிலையில் பத்தாயிரம் ரூபாவுக்கு கூட நெல்லை விற்பனை செய்தாலும் எமது நஷ்ட ஈட்டினை மீள பெற முடியாத நிலையில் விவசாயிகள் ஆகிய நாம் பெரும் நஷ்டத்தில் தள்ளப்பட்டுள்ளோம்.

அத்துடன் மேலும் தெரிவிக்கையில் -

சந்தையில் அரிசியை கொள்வனவு செய்து பயன்படுத்துபவர்கள் பாதிக்கப்படாத வகையில் 140 ரூபா அல்லது 130 ரூபா அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் ஓரளவு போதியதாக அமைந்திருக்கும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தினால் நெல் களஞ்சிய சாலைகள் நெல் கொள்வனவுக்காக புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# 'கிளீன் சிறிலங்கா'வேலைத் திட்டம் மருதமுனையில் சிறப்பாக நிறைவு

(பாறுக் ஷிஹான்)

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அனைத்து பிரதேசங்களிலும் திண்மக் கழிவுகளை முழுமையாக அகற்றல் மற்றும் கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்யும் விஷேட வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வியாழக்கிழமை நிறைவு பெற்றுள்ளது.

இறுதி நாளான நேற்று மருதமுனை மற்றும் பாண்டிருப்பு பிரதேசங்களில் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. மருதமுனையில் மேற்கொள்ளப்பட்ட கடற்கரை சுத்தப்படுத்தல் பணியில் மக்பூலியா பள்ளிவாசல் நிர்வாகத்தினரும் முழுமையாக பங்குபற்றி ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ்வேலைத் திட்டம் கல்முனை மாநகர சபையினாலும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்து.

இதன் பிரகாரம் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி தலைமையில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா பங்குபற்றலுடன் கடந்த சனிக்கிழமை சாய்ந்தமருதில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்வேலைத் திட்டம் கல்முனை, கல்முனைக்குடி, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, மணற்சேனை, பெரிய நீலாவணை உள்ளிட்ட அனைத்து பிரதேசங்களிலும் தொடர்ச்சியாக 06 நாள்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது அனைத்து பிரதேசங்களிலும் கொத்தணி அடிப்படையில் திண்மக் கழிவுகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளதுடன் கடற்கரை மற்றும் சூழவுள்ள பகுதிகளிலும் திண்மக் கழிவுகள் முழுமையாக அகற்றப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து இனிவரும் நாள்களில் கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவையானது வழமை போன்று முன்னெடுக்கப்படும் எனவும் பொது மக்கள் தமது வீடுகளில் அன்றாடம் சேருகின்ற கழிவுகளை சேகரித்து திண்மக்கழிவகற்றல் வாகனங்களில் முறையாக ஒப்படைக்குமாறும் பொது இடங்கள் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் கழிவுகளை வீசுவதை முற்றாக தவிர்ந்து கொள்ளுமாறும் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி கேட்டுக் கொண்டுள்ளார்.



# புத்தளம் அஹதிய்யா மாணவர்களுக்கான தலைமைத்துவ, மன ஆற்றல் பயிற்சி

(சியாஜ்)

புத்தளம் பாத்திமா அஹதிய்யாவின்ஏற்பாட்டில் புத்தளம் வை.எல்.டீ.பீ தன்னார்வ தொண்டர் குழுவின் ஒத்துழைப்புடன் மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியும் மனவளஆற்றல்மேம்பாட்டு போட்டிநிகழ்வும்அடங்கிய விஷேடபயிற்சிமுகாம்ஒன்று புத்தளம் சாரா நீச்சல் தடாக மையத்தில்அஹதிய்யாவின் அதிபர் திருமதி மபாஹிரா தலைமையில்இடம்பெற்றது.





இந்நிகழ்வில் சுமார் 70 இற்கும் மேற்பட்ட அஹதிய்யா மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றதுடன் அஹதிய்யாவின் பிரதி அதிபர் திருமதி றினூசா மற்றும் ஆசிரியர்கள்களும் கலந்து சிறப்பித்ததாக புத்தளம் வை.எல்.டீ.பீ தன்னார்வ தொண்டர் குழுவின் தலைவர் அஸ்ரிக் தெரிவித்தார்.

# கற்பிட்டி, பள்ளிவாசல்துறையில் இடம்பெற உள்ள 'கிளீன் சிறிலங்கா' வேலைத்திட்ட சிரமதான பணி

(சியாஜ்)

கற்பிட்டி பள்ளிவாசல்துறை தேசிய மக்கள் சக்தி குழுவின் ஏற்பாட்டில் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின்ஊடாகபள்ளி வாசல்துறை வெல்லங்கரையின் பிரதான வீதிகள் சிரமதானம் மூலம் சுத்தம் செய்யும் பாரிய வேலைத்திட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக் கப்பட உள்ளது.





இந்தவேலைத்திட்டம்பற்றிய விஷேட கலந்துரையாடல் தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் தொகுதி அமைப்பாளர்நிமல்பத்திரண மற்றும் ஒருங்கிணைப்பாளர் நிசாந்த ஆகியோரின் தலைமையில்இடம்பெற்றது. இதில் நலன் விரும்பிகள் மற்றும் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## லசந்த கொலை வழக்கு உணர்த்தும் உண்மைகள்

இலங்கையின் ஊடக உலகம் தற்போது 'அதிர்ச்சியில்' உள்ளது. 'தி சண்டே லீடர்' ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை தொடர்பாக சந்தேக நபர்களாக பெயரிடப்பட்ட மூன்று நபர்களை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க பரிந்துரைத்தமே இந்த அதிர்ச்சிக்குக் காரணம். இந்தக் கொலை தொடர்பிலும் ஏனைய சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் தொடர்பிலும் விசாரணை நடத்தி நீதியை நிலைநாட்டுவோம் என்று கூறிக்கொண்டு பதவிக்கு வந்த ஒரு ஆளும்தரப்பு இருக்கையிலேயே சட்ட மா அதிபர் இந்தக் கொலை தொடர்பில் மூன்று சந்தேகநபர்களை விடுவித்திருக்கிறார் என்பதே இந்த அதிர்ச்சிக்குக் காரணம்.

ஜனவரி 27, 2025 அன்று குற்றப் புலனாய்வுத்துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க தனது சட்ட ஆலோசனையில், மூன்று சந்தேகநபர்களுக்கு எதிராக மேலும் சட்ட நடவடிக்கை எடுக்க அரசு தரப்பிடம் முகாந்திரம் ஏதுமில்லை என்று கூறியிருந்தார். இராணுவ புலனாய்வுப் பிரிவில் இணைக்கப்பட்டிருந்த முன்னாள் சார்ஜென்ட் பிரேம் ஆனந்த உடலகம, மவுண்ட்லவினியா காவல்துறையின் முன்னாள் குற்றப்பிரிவு அதிகாரி பொறுப்பாளர் சப்–இன்ஸ்பெக்டர் திஸ்ஸ சிறி சுகதபால மற்றும் ஓய்வுபெற்ற மூத்த பிரதிப் காவல் மா அதிபர் பிரசன்ன நாணயக்கார ஆகியோருக்கு எதிராகவே ஆதாரங்கள் இல்லை என்று சட்ட மா அதிபர் கூறுகின்றார்.

குற்றச்செயல்களில்ஈடுபட்டவர்கள்தண்டனையின்றிவிடுவிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய ஆளும்தரப்பு இந்த விடயத்தில் தலையிடவேண்டும் என்று சுதந்திர ஊடக இயக்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கமும் சட்டமா அதிபர் அலுவலகம், அரசுத் தலைவர், நீதி மற்றும் ஊடக அமைச்சர்கள் மற்றும் முழு ஆளும்தரப்பின் மீதும் தங்கள் கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலையைச் செய்தது இராணுவத்தின் திரிபோலி என்கிற தனி அணி என்ற குற்றச்சாட்டு உண்டு. இந்தக் கொலையுடனும் கீத் நாயர், கீத் நொயர் மற்றும் உபாலி தென்னகோன் போன்ற பிற பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்களுடன் இந்தப் படைப்பிரிவுக்குத் தொடர்புகள் உண்டு என்று பல தகவல்கள் கடந்த காலங்களில் வெளியாகி உள்ளன. ஆனால், சட்ட ரீதியாக இந்த விசாரணைகளில் எந்தவித முன்னேற்றங்களும் இதுவரையில் இல்லை. கொலையாளிகளைக் கண்டறிவதில் ஆளும்தரப்புக்களின் தலையீடு காரணமாக காவல்துறையினர் சரியாகச் செயற்படவில்லை என்கிற குற்றச்சாட்டும், ஆட்சியாளர்களுக்காகவே இந்தக் கொலைகள், தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன என்பதால் அவர்களைப் பாதுகாப்பதில் ஆட்சியாளர்கள் தீவிரக் கவனமாக இருக்கிறார்கள் என்பதும் பல ஆண்டுகளாக நீண்டுவரும் குற்றச்சாட்டுக்கள்.

2010 ஆம் ஆண்டில், காவல்துறைத் தலைவர் இந்த வழக்கை பயங்கரவாத புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டார், அதே நேரத்தில், 'திரிப்போலி' படைப்பிரிவின் கட்டளை அதிகாரிக்கு தாய்லாந்து தூதரகத்தில் இராஜதந்திர பதவி வழங்கப்பட்டது. 2015 வரை, விசாரணைகள் நத்தை வேகத்திலேயே முன்னேறின. ரணில் – மைத்திரி ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஜூலை 2016 இல், இந்த வழக்கு தொடர்பாக பிரேமானந்த உடலகம என்ற புலனாய்வு அதிகாரி கைது செய்யப்பட்டு, லசந்தவின் கொலையை நேரில் கண்ட சாட்சியைக் கடத்தியமை, தாக்கியமை மற்றும் சதித்திட்டம் தீட்டியமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டார்.

லசந்தவின் முதல் மருத்துவ மற்றும் உடற்கூறாய்வு அறிக்கைகளில் முரண்பாடுகள் இருந்ததால், செப்டம்பரில் இரண்டாவது உடல்கூறாய்வுக்கு உத்தரவிடப்பட்டது. ஐப்பசியில், ஓய்வுபெற்ற புலனாய்வு அதிகாரி ஒருவர் அவரது வீட்டில் இறந்து கிடந்தார். அவரது உடலுக்கு அருகில் காணப்பட்ட ஒரு குறிப்பில், விக்ரமதுங்கவைக் கொன்றது அவர்தான் என்றும் உடலகம நிரபராதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டில், இந்த வழக்கு தொடர்பாக பல புலனாய்வு அதிகாரிகள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர், மேலும் சில புலனாய்வாளர்கள் ஆதாரங்களை மறைத்தனர் என்று குற்றம்சாட்டப்பட்டனர். ஆனால், சந்தேகநபர்கள் மூவரை விடுவித்தமை தொடர்பான தனது விளக்கத்தில் அவர்களில் இருவருக்கு எதிராக போதிய ஆதாரங்கள் இல்லை என்றும் மற்றொருவர் லசந்தவின் வழக்கோடு தொடர்புடைய தனி வழக்கிற்குரியவர் என்றும் தெரிவித்திருக்கிறார். அவருக்கு எதிராகவும் ஆதாரங்கள் இல்லை என்கிறார். இதுவே இப்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக இந்தக் கொலை விசாரணையில் மீண்டும் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமை அமைச்சர் ஹரினி நாடாளுமன்றத்தில் உறுதியளித்திருக்கின்றார். நீண்டகாலமாகிவிட்டபின்னர்புதியகுற்றப்பத்திரிகை மூலம் சாதிக்கப்படப்போவது என்னவென்று தெளிவாகவில்லை. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரகைக்கே ஆதாரங்களைத் திரட்ட புலனாய்வாளர்கள் தயாரில்லாதபோது, அல்லது தேசபக்தியின் பெயரால் அவர்கள் தயங்கும்போது புதிய, காலதாமதமான குற்றப் பத்திரிகைக்கு ஆதாரங்களை எப்படி எங்கிருந்து சேகரிப்பார்கள் என்பது தெரியவில்லை.

சில விடயங்களை உரிய காலத்தில் விரைந்து முடிக்கவேண்டியதன் அவசியத்தை லசந்தவின் படுகொலை வழக்கு உணர்த்தி நிற்கின்றது. இது இந்த வழக்கில் மட்டுமல்ல வடக்கு கிழக்கில் காணாமலாக்கப்பட்ட ஒவ்வொருவர்விடயத்திலும் நீதிக்குப்புறம்பாகப்படுகொலைசெய்யப்பட்டவர்கள் விடயத்திலும் பொருந்தும். இதுபோன்ற காலதாமதமான சூழல்களில் விசாரணைகளையும் நீதியையும் எப்படி நிலைநாட்டுவது என்பதில் பன்னாட்டு உதவிகயைப் பெற்றால் மட்டுமே அது சாத்தியமாகும். ஆளும்தரப்பு அதற்குத் தயாராக இருக்கிறதா?

# கல்முனை மாநகர சபையின் கணக்காளராக பிரியதர்ஷன்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் புதிய கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ள பி. பிரியதர்ஷன் தனது கடமைகளை புதன்கிழமை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி முன்னிலையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, உள்ளூராட்சி உத்தியோகத்தர் சர்ஜூன் தாரிக், நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக், நிர்வாகப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வரவர்மன், நிதிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம். பாஸித் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை மாநகர சபையின் கணக்காளராக கடமையாற்றி வந்த வை. ஹபீபுல்லாஹ் அவர்கள் சமுர்த்தி திணைக்களத்தின் பிரதம கணக்காளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றதையடுத்தே, களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையின் கணக்காளராக கடமையாற்றி வருகின்ற பி. பிரியதர்ஷன் அவர்கள் அப்பதவிக்கு மேலதிகமாக மாநகர சபையின் கணக்காளராக பதில் கடமையாற்றும் பொருட்டு கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

# திருமலை மாவட்ட இந்துமத இணைப்பாளர் நியமனம்



திருமலை மாவட்டத்தில் அமைந்துள்ள கருமாரி புரம் கன்னியா திருவேற்காடு கருமாரியம்மன் ஆலய ஸ்தாபகர் மற்றும் ஆதீனகர்த்தா சகாயராஜா அந்தோணி சர்வதேச இந்துமத பீடத்தின் திருமலை மாவட்டத்தின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நியமண கடிதத்தை சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா உத்தியோபூர்வமாக கையளித்தார்.

# ஜப்பானின் அரச சார்பற்ற நிறுவனத்தின் உதவியில் வடக்கில் 95 பாடசாலை கட்டடங்களை புனரமைப்பு



ஜப்பானின் அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதி உதவியில் வடக்கில் 95 பாடசாலை கட்டடங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவைத்தளமாககொண்டு இயங்கும்சேவாலங்காநிறுவனமானது ஜப்பானின்நிப்பொன்பவுண்டேசன் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதி உதவியுடன் வடமாகாணத்தில் 95 பாடசாலை கட்டடங்களை புனரமைத்தல் மற்றும் புதிதாக நிர்மாணித்தல் வேலைத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளது.





அதன்ஒருகட்டமாகவவுனியா முஸ்லிம் மகாவித்தியாலத்தின் மாணவர்களுக்கான வகுப்பறை கட்டடம் ஒன்றை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் இருந்து வருகை தந்த நிப்பொன் பவுண்டேசன் உயர் அதிகாரிகள், சேவாலங்கா நிறுவனத்தினர் ஆகியோர் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கு விஜயம் செய்து குறித்த சேதமடைந்த கட்டடத்தை பார்வையிட்டதுடன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருடனும் இதன்போது கலந்துரையாடி இருந்தனர்.

# நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் விழிப்புணர்வு நிகழ்ச்சி

(பாறுக் ஷிஹான்)

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் அம்பாறை மாவட்ட செயலக நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நூகர்வோர் அதிகார சபையின் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நிந்தவூர் கமு/ஃஅல்-அஷ்ரக் (தேசிய பாடசாலை) உயர்தர பிரிவு மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி பாடசாலையின் அதிபர் ஏ. அப்துல் கபூர் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது நுகர்வோர் உரிமைகள்,பொறுப்புகள்,சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருள்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருள்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்பந்தமாக மாணவர்களுக்கு விளக்கக்காட்சி ஊடாக தெளிவுபடுத்தப்பட்டது.

இவ் விழிப்புணர்வு நிகழ்சிக்கு பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி இஷட்.எம் ஸாஜீத் மற்றும் புலன் விசாரணை அதிகாரி ஏ.பி.எம் காமீல், ஏ.பீ.எம் றிப்சாத் ஆகியோருடன் பிரதி0 அதிபர் மற்றும் பாடசாலையின் உயர்தரப் பிரிவு பகுதித் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.





# வவுனியா நெற் சந்தைப்படுத்தல் சபையால் நெற்கொள்வனவு மேற்கொள்ளப்படவில்லை

## விவசாயிகள் கவலை



வவுனியா நெற் சந்தைப்படுத்தல் சபையால் வியாழக்கிழமை நெற்கொள்வனவு மேற்கொள்ளப்படவில்லை என விவிசாயிகள் கவலை தெரிவித்தனர்.

அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் வவுனியா மாவட்டத்தில் உள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையால் விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்வனவு செய்யப்படவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், நெல் கொள்வனவிற்கான நிதி தமக்கு கிடைக்காமையாலேயே நெற்கொள்வனவை முன்னெடுக்கவில்லை என்றும், திங்கள் கிழமைக்கு பின்னரே நெற் கொள்வனவினை மேற்கொள்ள முடியும் என நெல் சந்தைப்படுத்தும் சபையினர் தமக்கு தெரிவித்ததாக விவசாயிகள் தெரிவித்தனர். 100

# கேரளக் கஞ்சா கடத்திய 2 பிரபல வியாபாரிகளுக்கு தடுப்புகாவல்

(பாறுக் ஷிஹான்)

கேரளக்கஞ்சாவுடன்கைதாகிய இரு பிரபல வியாபாரிகளையும் எதிர்வரும் பெப்ரவரி 11 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.



கடந்த புதன்கிழமை கல்முனை விசேட அதிரடிப்படையினரால் பெருந்தொகையான கேரளக் கஞ்சாவுடன் கைதான 2 பிரபல வியாபாரிகளையும் நேற்று மன்றில் முன்னிலைப்படுத்திய போது கல்முனை நீதிமன்ற நீதிவான் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆந் திகதி 5 நாள்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# குறிஞ்சிப்பிட்டி நூர் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கல்

(சியாஹ்)

கற்பிட்டி, குறிஞ்சிப்பிட்டி இளைஞர்கள் மற்றும் நலன் விரும்பிகள் சிலரின் நன்கொடையாக குறிஞ்சிப்பிட்டி நூர் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை மற்றும் புத்தக பைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு பாலர் பாடசாலையின் ஆசிரியர் தலைமையில் இடம்பெற்றது.

2025 ஆம் ஆண்டில் குறிஞ்சிப்பிட்டி நூர் பாலர் பாடசாலையில் புதிதாக இணைந்து கொண்ட சகல மாணவர்களுக்கும் குறிஞ்சிப்பிட்டி இளைஞர்கள் மற்றும் நலன் விரும்பிகள் சிலரின் நன்கொடைகளை கொண்டு மேற்படி சீருடை மற்றும் புத்தக பைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி இளைஞர்கள் மற்றும் நலன் விரும்பிகளுக்கு பாலர் பாடசாலை நிர்வாகம் சார்பாக தமது நன்றிகளை தெரிவிப்பதாகவும் ஆசிரியர் குறிப்பிட்டார்.

# கிழக்கு மாகாண புதிய பிரதம செயலாளர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண புதிய பிரதம செயலாளர் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட டீ.ஏ.சீ.என். தலங்கம வியாழக்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

குறித்த நிகழ்வானது திருகோணமலை வரோதயர் நகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தில் மிக எளிமைமையான முறையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டீ. ஏ.சீ.என். தலங்கம இதற்கு முன்னதாக மீன்பிடி அமைச்சின் மேலதிகச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவால் கடந்த ஜனவரி மாதம் ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து இவருக்கான நியமனக்கடிதம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பாடசாலை மாணவர்களுக்கான மத்தியஸ்தம் தொடர்பான பயிற்சி

(பாறுக் ஷிஹான்)

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரைமப்பு அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் எஸ்ஈடிஆர் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் பாடசாலை மாணவர்களுக்கான மத்தியஸ்தம் தொடர்பான மூன்று நாள் பயிற்சி செயலமர்வு கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை மத்தியஸ்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நீதி அமைச்சால் இணைக்கப்பட்டுள்ள மத்தியஸ்த உத்தியோகத்தர் மாஜிதா ஒருங்கிணைப்பில் கடந்த பெப்ரவரி மாதம் 3, 5, 6, ஆம் திகதிகள் பயிற்சி செயலமர்வானது நடைபெற்று 3 நாள்களுடன் நிறைவுற்றது.

இப்பயிற்சி செயலமர்வின் இறுதிநாள் நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.ஐ. ஜாபீர் உட்பட பிரதி அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டதுடன் வளவாளர்களாக நீதி அமைச்சின் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ.முஹமட் அஜுன் , ஏ.எல் றினோசா சக உத்தியோகத்தர்களாக அருள் பிரசாந்தன் மற்றும் பாறுக் ஷிஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பயிற்சி செயலமர்வின் மூலம் மாணவர்கள் மத்தியஸ்தம் தொடர்பில் முரண்பாடுகளைத் தீர்ப்பது தொடர்பாகவும் பயிற்சி வழங்கப்பட்டதுடன் எதிர்கால மாணவ சமுதாயம் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் தொடர்பாகவும் விரிவாகவிளக்கமளிக்கப்பட்டது .அத்துடன் பாடசாலை மத்தியஸ்தம், மத்தியஸ்த வரலாறு ,முரண்பாடு ,முரண்பாட்டு தீர்வின் முக்கியத்துவம், தொடர்பாடல், கலந்துரையாடல், மத்தியஸ்த படிமுறைகள், பாடசாலை மத்தியஸ்தத்தில் மாணவர்களின் பங்கு என்பன தெளிவூட்டப்பட்டன.




# கல்வி மேம்பாட்டு வேலைவாய்ப்பு முன்மாதிரிக் கிராமம் உசனில்

## வைத்தியர் பரமநாதனின் முன்மாதிரி

(சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உசன் கிராமத்தில் கல்வி மேம்பாடு-தொழில் வாய்ப்பு ஆகிய பல்வேறு செயற்திட்டங்களை உள்ளடக்கிய மாதிரிக் கிராமம் ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய இராஜ்சியத்தைச் சேர்ந்த வைத்தியரும்- கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் லண்டன் கிளை உப தலைவருமான வே.பரமநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -



முதற்கட்டமாக தென்மராட்சி-உசன் கிராமத்தில் பிரதேச புலம்பெயர் மக்களுடைய மிகப்பெரிய பங்களிப்பில் மாதிரிக் கிராமம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன் ஓர் அங்கமாக முன்பள்ளிக் கல்வி- ஆரம்பக் கல்வி மற்றும் இடை நிலைக் கல்வி ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உசன் கிராமத்தில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் 10மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பாலர் பாடசாலை இன்று 35 மாணவர்கள்- மூன்று ஆசிரியர்கள் - கட்டட வசதிகளுடன் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

அத்தோடு உயர்தரத்தில் சித்தியடைபவர்கள் அனைவராலும் பல்கலைக்கழகம் செல்ல முடிவதில்லை. அவ்வாறு பல்கலைக்கழக கல்வியை தவற விட்டவர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கில் கிராமத்தில் செயற்கை நுண்ணறிவு மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய கற்கைகளை இலவசமாக பயிலக்கூடிய வழிவகைகள் இவ்வாரம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

மேலும் பிற நாடுகள் மற்றும் வேறு பிரதேசங்களுக்கு சென்று பணி செய்யக்கூடிய விதத்தில் ஆங்கில மற்றும் சிங்கள அறிவை முன்பள்ளிப் பராயத்தில் இருந்து எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மிக விசேடமாக கிராமத்தில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கிலும் - தற்சார்ப்பு பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கிலும் கிராமிய பண்ணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனூடாக அதில் ஆர்வம் கொண்டவர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முடியும்.

உசன் கிராமத்தில் இந்த செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்ட பின்னர் ஏனைய கிராமங்களிலும் இந்தச் செயற்திட்டத்தை முன்னெடுக்க ஆர்வமாக இருப்பதாக மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

வைத்தியர் பரமநாதன் கடந்த 1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இருந்து புலம்பெயர்ந்து சென்று 48வருடங்களாக ஐக்கிய இராஜ்சியத்தில் வைத்தியராக கடமைபுரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மின்சார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகள் தொடர்புப்பட்டுள்ளது. ஆகவே கட்டம் கட்டமாகவே தீர்வு காண்பதற்கு நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார் அமைச்சர்.

இதனைத் தொடர்ந்து எழுந்து மேலதிக கேள்விகளை முன்வைத்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே, இலங்கை மின்சார சபை ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக வேதனாதிகளுக்காக வருடாந்தம் 5 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்படுகிறது. மின்சார சபையில் பெரும் மாபியாக்கள் உள்ளன. அவற்றில் மின்சார பொறியியலாளர் சங்கத்தை பிரதான மாபியா என்று குறிப்பிட வேண்டும்.

மின்சார சபையில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிகின்ற நிலையில், 50 சதவீதமான பணிகள் தனியார் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது. ஆனால் சம்பளம் மாத்திரம் இலட்சக்கணக்கில் சபையின் ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது. மின்சார சபையின் பொறியியலாளரின் மாத சம்பளம் எவ்வளவு?

மின்சார சபையில் பல மாபியாக்கள் உள்ளன யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல தீவுகள் உள்ள நிலையில் அங்கு எரிபொருள் ஊடான மின்சாரமே விநியோகிக்கப்படுகிறது. அப்பகுதியில் சூரிய மின்னுற்பத்தி ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும். ஆகவே மின்சார சபையின் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன? என்று அவர் கேள்வியெழுப்பினார்.

இதற்கு எழுந்து பதிலளித்த மின்சாரத்துறை அமைச்சர், மின்சார சபையில் குறைப்பாடுகள் இருப்பதை ஏற்றுக்கொள்கிறோம். இது இன்று நேற்று இடம்பெற்றதல்ல, காலம் காலமாகவே இடம்பெறுகிறது. அரசியல் தலையீடுகளுடன் கடந்த காலங்களில் தீர்மானங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசியல் பரிந்துரைகளுடன் நியமனங்கள். தகுதியில்லாதவர்கள் பலர் அரசியல்வாதிகளின் பரிந்துரையுடன் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள். இதுவும் பிறிதொரு பிரச்சினையாகக் காணப்படுகிறது. மின்சார சபையின் மறுசீரமைப்புக்கள் எதிர்வரும் 6 மாத காலத்துக்குள் நிறைவு செய்யப்படும். பிரச்சினைகளுக்கு கட்டம் கட்டமாக தீர்வு காணப்படும் என்றார்.

## சட்டமா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதுமான ஆதாரங்கள் இல்லை என்று சட்ட நடவடிக்கைகள் வெளிப்படுத்தின.

இதற்கிடையில், ஹெட்டியாராச்சிகே டான் திஸ்ஸசிறி சுகதபால மற்றும் விதாரண ஆராச்சிகேசிறிமேவன் பிரசன்னநாணயக்கார ஆகிய இருவர் மீதும், விக்ரமதுங்கவின் கொலைக்கு முன்னர் அவரைப் பின்தொடர்ந்த மோட்டார் சைக்கிள்களின் பதிவு எண்கள் இருந்ததாகக் கூறப்படும் களக் குறிப்பேட்டைக் காணாமலாக்கினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

நடைமுறை குறைபாடுகள் மற்றும் போதுமான ஆதாரங்கள் இல்லாததால், மூன்று சந்தேக நபர்களையும் விடுவித்து, மேலும் சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தவிர்க்க சட்டமா அதிபர் முடிவு செய்தார் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இலங்கை ஏற்றுமதி ஊக்குவிப்பு சபையினால் (சிம்ய) ஏற்பாடு செய்யப்பட்ட 26ஆவது விருது விழாவில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு விலைமதிப்பற்ற சேவையைச் செய்த ஏற்றுமதியாளர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதன்படி, ஏற்றுமதித் துறைக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் விதிவிலக்கான பங்களிப்புகளைச் செய்த இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு, ஜனாதிபதியால் வழங்கப்படும் மிக உயரிய விருதான ஜனாதிபதி ஏற்றுமதி விருதும் வழங்கப்பட்டது. நிகழ்வில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய சந்தை ஒரு உலகளாவிய சங்கிலியாக மாறியுள்ளது., அதில் பங்குதாரராக மாறுவதற்கு, நாட்டுக்கு சாதகமான வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்யவேண்டும். பிடிவாதமாக தன்னிச்சையான குழந்தையைப் போல சந்தையை ஆக்கிரமிக்க முடியாது.

தரமான சந்தையில் நுழைவதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்க ஆளும்தரப்பு ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருகிறது. உலகில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப புதிய பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதில் ஆளும்தரப்புச் சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளது.

மின்சாரக் கட்டணங்களில் நிலையான குறைப்பைப் பேண புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்து அதிக கவனம் செலுத்தப்படும் என்றும், சில ஆண்டுகளுக்குள் செலவுகளைக் குறைத்து நிலையான விலையை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

நாட்டின் பொருளாதாரத்தை மற்றுமொரு நிலைக்கு கொண்டு செல்ல ஆளும்தரப்பு அதிகபட்ச முயற்சிகளை மேற்கொள்ளும். ஒரு சிறிய தவறுகூட பொருளாதாரத்திற்கு ஆபத்தான அடியாக அமையக்கூடும் என்பதால், பொருளாதாரம் தொடர்பான முடிவுகளை எடுக்கும்போது மிகுந்த கவனம் செலுத்தவேண்டும் என்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

நாடு தற்போது பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு கவனமாக நகர்ந்து வருவதால், பரஸ்பர புரிதலுடன் இந்தக் கடினமான தடையைத் தாண்டுவதில் ஏற்றுமதியாளர்களும் கைகோர்க்கவேண்டும் - என்றார்.

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி யான்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி, கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியான்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க, கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியான்மை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, இலங்கை ஏற்றுமதி ஊக்குவிப்பு சபையின் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரி மங்கள விஜேசிங்க, இலங்கை வர்த்தக சபையின் தலைவர் துமிந்த ஹூலங்கமுவ, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இராஜதந்திரிகள், அமைச்சுகளின் செயலாளர்கள், இலங்கை ஏற்றுமதி ஊக்குவிப்பு சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# கண்ணையே கொடுத்தார் தன்னையே மறந்து!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ....... ஆஸ்திரேலியா



உலகிலே பல மொழிகள் காணப்படுகின்றன. அந்த மொழிகளில் எங்கள் தமிழ் மொழியும் ஒன்றாகும். ஏனைய மொழிகளுக்கெல்லாம் இல்லாத ஒரு பெருமையை எங்கள் தமிழ் மொழி பெற்றிருக்கிறது. எல்லா மொழிகழுமே இலக்கியத்தைக் கொண்டுதான் இருக்கின்றன. அந்த இலக்கியத்தால் அந்த மொழிகளும் பெருமையினையும் பெற்றிருக்கின்றது. அப்படிப் பெருமையினைப் பெற்றாலும் , தமிழ் பெறும் பெருமைக்கு ஈடாக முடியாது என்பதுதான் கவனத்துக்குரியதாகும். ஏனைய மொழிகளைவிட தமிழ் மொழி அப்படி என் னதான் முக்கியத்துவத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது என்று அறிந் தி டும் ஆவல் ஏற்படுகிறதல்லவா ? அதுதான் ' பக்தி இலக்கியம் ' ஆகும். பக்திக்கு என்று இலக்கியங் கண்ட உலகின் ஒரே மொழி எங்கள் தமிழ்மொழி மட்டுமேயாகும்

இலக்கியம் என்றால் ஒரு இலக்கை நோக்கி அழைத்துச் செல்லுவது என்று தான் அறிஞர்கள் சொல் லுவார்கள். இலக்கியம் என்னும் பொழுது அதில் பக்தி யினைப் புகுத்த வேண்டும் என்னும் சிந்தனை புதியதோர் சிந்தனை என்றுதான் கொள்ளல் வேண்டும். அதனைத் தமிழ் சமூகத்தார் செய்திருக்கிறார் கள் என்ப திலிருந்து அவர்களின் மனப்போக்குப் புலப்பட்டு நிற்கிறதல்லவா. சுவைத்துப்படிக்கும் இலக் கியத்திலும் பக்தியானது இருக்க வேண்டும் என்னும் கருவானது மிகவும் உன்னதமான ஒன்றாகவே பார்க்கப்பட வேண்டியதேயாகும். எப்படியும் வாழலாம் என்று வாழும் வாழ்க்கையைவிட இப்படித் தான் வாழ வேண்டும் என்று வாழுதல்தான் சிறந்த வாழ்வாகும். அப்படி வாழும் வாழ்வினைத்தான் ' வைய த்துள் வாழ்வாங்கு வாழுதல் ' என்கின்றோம்.அப்படி வாழ்வதற்கு உரிய வழியினைக் காட்டிடக் கை கொடுத்து நிற்கும் நிலையில் முகிழ்த்ததுதான் பக்தி இலக்கியம் என்னும் புதுக்கரு என்று கூட எடுத் துக் கொள்ளலாம் அல்லவா !

பக்தியினால் பக்குவம் வருகிறது. பக்தியினால் பண்பு வளர்கிறது. பக்தியினால் அன்பு துளிர்க்கிறது. பக்தியினால் உயர்வுதாழ்வு அகல்கிறது. பக்தியினால் தர்மம் செழிக்கிறது. அறம் மலர்கிறது. பக்தி யினால் விருந்தோம்பல் சிறக்கிறது. பக்தியினால் ஒழுக்கம் உயர்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக நல்லதோர் சமூகமே உருவாகிறது என்பதுதான் கருத்திருத்த வேண்டிய கருத்தெனலாம். இவை எல் லாவற்றையும் மனமிருத்தி பக்தி இலக்கியப் பாதையிலே ஒருவர் ஆசையுடன் பயணிக்கிறார். அந்தப் பயணத்தை அவர் சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் யாவருக்கும் பயன்படும் வண்ணம் ஆக்கியும் விட்டிருக்கிறார் என்பது இங்கு நோக்கத்தக்கதாகும். அப்படி பயணிணித்த அவர் பக்தியினால் ஒரு பரிசி னையும் எமக்கெல்லாம் வழங்கியும் நிற்கிறார். அந்தப் பரிசு என்ன என்று அறிந்திடும் ஆவல் எழுகிறத ல்லவா ? அந்தப்பரிசுதான் ' பெரிய புராணம் '. பக்தியின் பரிசாக எமக்கெல்லாம் பயனுற வழங்கியர் தான் ' சேக்கிழார் பெருமான் '.. இவரின் பரிசின் பெருமை காரணமாக ' பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ ' என்று தமிழுலகமே இவரை வியந்து போற்றி நின்றது.

நாயன்மார்களும் பக்தியினைப் பாடினார்கள். ஆழ்வார்களும் பக்தியினைப் பாடினார்கள். அவர்களின் பக்தியின் அனுபவம் வேறாக இருந்தது. அந்த அனுபவங்கள் அத்தனையும் அவர்களுக்கு வாய்த்த அனு பவங்களின் வெளிப்பாடாக வேதான் இருந்திருக்கிறது. ஆனால் சேக்கிழார் காட்டும் பக்தி அனுபவமும் அதற்காக எடுத்துக் கொண்ட முறையும் முற்றிலும் வேறு பட்டதாகவே காணப்படுகிறது. ஆண்டவனி ன் அருளினை அடியார்கள் தங்களின் திருப்பாடல்கள் வாயிலாக எமக்கெல்லாம் காட்டி நின்றார்கள். அந்த அடியார்களையும் அவர்களின் பக்தியின் நிலையினையும், பக்குவத்தையும் யாவருக்கும் காட்டும் புதிய உத்தியினையே வெளிப்படுத்தும் நிலையில் சேக்கிழாரின் செயலமைந்தது என்பதுதான் இங்கு முக்கிய திருப்பமாய் அமைகிறது எனலாம்.

சேக்கிழார் காட்டும் அடியார்கள் ஒவ்வொருவருமே ஒவ்வொரு விதமானவர்கள். அவர்களின் சிந் தனை , செயல்கள் அனைத்துமே மாறுபாடானவை. அது மட்டுமட்டுமல்ல வேறு பாடானவையாயும் அமைந்திருந்தன. ஆனால் அவர்கள் அனைவரையும் பக்தி என்னும் ஒரு குடைக்கீழ் வந்து நிற்கச் செய் கிறார் சேக்கிழார் என்பதுதான் மிகவும் சிறப்பாகும். அப்படி அவரின் குடைக்குள் வந்து நிற்கும் வித்தி யாசமான ஒரு அடியார்தான் , ' தன்னையே மறந்து கண்ணையே கொடுத்த கண்ணப்பர்.'

பெரியபுராணத்தில் பல அடியார்களின் பக்தியின் நிலையினைப் பார்க்கலாம். ஆனால் கண்ணப்பரின் நிலையினைஇக்காலச்சமூகத்தார்ஏற்றுக்கொள்ளுவார்களா என்னும் கோணத்தில் , சேக்கிழாரின் அடிச்சுவட்டில் நாமும் பயணித்து , சேக்கிழாரின் சிந்தனை எப்படி அமைகிறது என்பதைப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் அல்லவா !

சரியை, கிரிகை, யோகம் , ஞானம், என்னும் படிமுறைகளில் அடியார்களும் இருந்திருக்கிறார்கள். அவர்களின் பக்தி செய்யும் பாங்கும் இருந்திருக்கிறது என்பதுதான் பொதுமையான கருத்து நிலை யாகும். இந்த படி முறைக்குள்தான் ஏதாவது ஒன்றில்த்தான் எங்களின் பக்தியின் பாதையும் அமைந்து இருக்கிறது. இந்தப் படிமுறைகள் பற்றிக் கற்றுணர்ந்தவர்களே பெரும்பாலும் அறிந்தவர்களாக இருப் பார்கள்.சாதாரணமானவர்களோ தங்களுக்குப் பொருந்தும் வண்ணம் பக்தியினை வெளிப்படுத்தி நிற்பார்கள்.பக்தியெனும் பொழுது அங்கே அறிவு முக்கியமாக அமையாது உணர்வுதான் மேலோங்கி முக்கியமாகி முன் வந்து நிற்கிறது என்பதுதான் யதார்த்தமாகும்.இவ்வாறு உணர்வு எழும் நிலையி லும் எழுகின்றவர்களின் தன்மைக்கு ஏற்பவே அது அமையும் என்பதுதான் முக்கியமாகும். ஒருவர் உணர்வு மேலீட்டால் செய்வது போன்று இன்னொருவரும் செய்வார் என்று எதிர்பார்த்திடவே கூடாது. இந்த நோக்கில்த்தான் சேக்கிழார் கண்ணப்பரை நோக்குகிறார். எங்களுக்கும் காட்டுகிறார்.

வெல் படைத் தறுகண் வெஞ்சொல்

வேட்டுவர் கூட்டம் தோறும்
கொல் எறி குத்து என்று
ஆர்த்துக் குழுமிய ஓசை அன்றிச்

கண்ணப்பர் பிறந்த சூழலை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து சேக்கிழார் காட்டுவது மிகவும் முக்கியமான கருத்தெனலாம். 'கொல் , எறி , குத்து ' என்னும் ஓசைதான் அங்கே முன்னிற்கும் ஓசையாகக் காட்டப்படுகி றது.

மைச்செறிந் தனைய மேனி

வன்தொழில் மறவர் தம்பால்
அச்சமும் அருளும் என்றும்
அடைவிலார் உடைவன் தோலார்
பொச்சையி னறவும் ஊனின்
புழுக்கலும் உணவு கொள்ளும்
நச்சழற் பகழி வேடர்

கண்ணப்பரின் வேடர் கூட்டம் கரிய மேனியைக் கொண்டவர், அச்சம் என்பது அவர்களிடம் இல்லை. அதே வேளை அருளுங்கூட அவர்களிடம் இல்லை.அவர்கள் தொழிலே கொடுந்தொழிலாகவே இருப்பதாய் சேக்கி ழார் படம் பிடிப்பதுபோல் ஆரம்பத்திலே காட்டி நிற்கிறார். அதுமட்டுமல்லகண்ணப்பரின்தகப்பன்குற்றமேகுணமாகக் கொண்டிருக்கிறானாம்.காரணம்அவனின்இந்தப்பிறவியில் அவனுக்கு வாய்த்த சூழலேயாகும். அதனால் அவன் கொலைசெய்யவும்அஞ்சாநிலையினைஉடையவனாகவே காணப்படுகிறான்.அப்படி இருக்க அவனுக்கு எப்படி கண்ணப்பராகப் போகின்றவர் பிள்ளையாகப் பிறக்க முடிந்தது என்னும் ஐயம் எழுத்தானே செய்யும் ? அதற்கும் பொருத்தமாய் சேக்கிழார் பதிலினைப் பகர்ந்து நிற்கிறார்.

பெற்றியால் தவமும் செய்தான்

ஆயினும் பிறப்பின் சார்பால்
குற்றமே குணமா வாழ்வான்
கொடுமையே தலைநின் றுன்னான்

முற்பிறப்பில் செய்த தவப்பயனால்த்தான் கண்ணப்பர் அவனுக்குப் பிள்ளையாக வாய்க்கும் நல்வாய்ப்புக் கிடைத்திருக்கிறதாம் என்பதையே ' பெற்றியால் தவமும் செய்தான்'என்று சேக்கிழார் தகுந்த பதிலாகக் காட்டுகின்றார். ஆனால் இப்பிறப்பில் கண்ணப்பரின் தந்தையின் இயல்பு வேடர்க்குரியதாகவே ஆகிவிட்டது என்பதையும் சேக்கிழார் காட்டிநிற்கத்தவறவேஇல்லைஎன்பதைத்தான் இப்பாடலின் அடுத்த வரிகள் காட்டி நிற்கின்றன.

வேடர் குலத் தலைவனுக்கு எல்லாவளமும் இருந்தும் பிள்ளைச் செல்வம் இல்லா நிலையில் தங்களின் குலதெய்வமான முருகக்கடவுளை வேண்டி நிற்கிறான். அவனின் முன்வினைப் பயனாக ஒரு ஆண்குழ ந்தை பிறக்கிறது. வேடர் குலமே ஆனந்தப் பரவசப்பட்டு நிற்கிறது. பிறந்த குழந்தையை தந்தை ஆசையுடன் தூக்கு கிறான். அந்தக் குழந்தை மற்றைய குழந்தைகள் போலல்லாமல் கனமாக அதாவது திண்மையாக இருந்தத படி யால் ' திண்ணன் ' என்று பெயர் சூட்டி மகிழ்கிறான். வேடர் குலமே திண்ணன் , திண்ணன் என்று வானைத் தொட கோஷமிட்டு நிற்கிறது.திண்ணன் என்னும் பெயரும் கூட பின்னால் வரப்போகின்ற நிகழ்வுக்கு கட்டியங் கூறுவதாக அமைகிறதோ என்பதும் சிந்திக்க வேண்டியதேயாகும். தன்னையே இழக் கும் திடம் அதாவது திண்ணம் அவனின் கருவிலேயே கருக்கொண்டு விட்டிருக்கிறது என்பதைத்தான் தந்தையின் வாயிலிருந்து அந்தக் குழந்தைக்குப் பெயராக வாய்ததோ என்றும் எடுத்துக் கொள்ளும் நிலை யும் இருக்கிறதல்லவா ?

திண்ணன் வளர்கிறான். வளர்ந்த திண்ணன் வேடர்குல வழக்கப்படி காட்டுக்குக் கன்னி வேட்டையாடச் செல்கிறான். அவனுடன் வேடர்கள் பலர் செல்கிறார்கள் வேட்டை நாய்களும் செல்லுகின்றன. திண்ணனின் அணுகு தொண்டராக நாணன் என்பவனும் காடன் என்பவனும் கூடவே செல்கிறார்கள். வேட்டையின் பொழுது முரட்டுப்பன்றி ஒன்றினால்திண்ணனும்கூட்டமும்களைத்தேபோகும்நிலை உண்டாகிறது. களைத்தாலும் திண்ணனின் தீரத்தால் அந்த மூர்க்கமான பன்றி குத்திக் கொல்லப்படுகிறது.களைத்த திண் ணன் நீரருந்தும் இட த்தை நாட நிற்கும் நிலையில் அவனுடன் வந்த நாணன் பக்கத்தில் பொன்முகலி ஆறு இருக்கிறது என்னும் செய்தியைச் சொல்லி அவனை அழைத்துச் செல்லுகிறான். ஆற்றில் நீருண்டு களை ப்பாறும் திண்ணனுக்கு அங்கிருக்கும் மலைபற்றிச் சொல்லுகிறான். திண்ணனும் மலையிலேறி மலை வள த்தைப் பார்த்திட விரைகிறான். அங்கு குடுமித்தேவரைக் காணுகிறான். அதன் பின் அவன் எப்படியெல்லாம் நடந்து கொள்ளுகிறான் என்னும் கதைகளை நாமனைவருமே நன்கு அறிந்து வைத்திருக்கிறோம்.

திண்ணன் என்னும் வேடன் , ஒரு காடன் , எப்படி இவ்வாறு ஆகினான் என்பதுதான் அனைவரின் மனத் திலும் இன்றுவரை எழுந்து கொண்டே இருக்கும் கேள்வி எனலாம்.கொத்து, வெட்டு, கொல்லு, என்னும் சூழ லைக் கொண்ட இடத்தில் பிறந்தவன். அன்பு என்றால்

தொடர்ச்சி மறுபக்கம்...

# கண்ணையே...

8ம் பக்கத் தொடர்ச்சி..........

என்னவென்றே விளங்காதவன், சமயம் தெரியாத வன், தத்துவம் என்றால் என்னவென உணராதவன், எப்படித் தன்னையே மறந்தான். தன் கண்ணையே பிடுங்கினான் ! புரியாத புதிராக இருக்கிறதல்லவா ? அன்பு என்பது சாதாரணமானது அல்ல! இதனால்த்தான் ' அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் ' என்றார் வள்ளுவப் பேராசான் என்று எண்ணத்தோன்றுகிறது. மாறா அன்பு ஒருவரிடம், ஒரு இடத்தில் ஏற்பட்டுவிடுமானால் அந்த நிலையில் செய்யப்படும் அனைத் துமே வியப்புக்குரியதாக , நினைத்துமே பார்க்க முடியாததாகவேதான் அமைந்துவிடும். அந்த வியப்பி னையே திண்ணன் தன் கண்ணைப் பிடுங்கி அப்பிய நிலையும் எனலாம்.தவமிருந்து பெற்ற பிள்ளையை தாய் பிடிக்க தந்தை வாளால் வெட்டுகி றார்.நடக்குமா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா ? எப்படி நடந் தது ? தன்னை மறத்தலும். தன்னையே இழத் தலும்தான் இதன் அடிப்படை எனலாம்.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

தன்னை மறக்கும் நிலை பற்றி இத்திருப்பாடலின் கருத்தாகவேதான் திண்ணனின் செயலும் அமைந் திருக்கிறது.

நல்வினையும் , தீவினையும் , ஆன்மாவைப் பற்றியபடியேதானிருக்கும். நல்வினை இறை நாட்டத்துக்கு அழைத்துச் செல்வதையே நோக்கமாகக் கொண்டிருக்கும்.அவ்வேளை தீவினை தடுத்திட முன்வந்து நிற் கும்.நல் வினையானது முந்திக்கொள்ளும் பொழுது தீவினை செயலற்றுப் போய் விடுகிறது. ஆண் டவனை ஆன்மா அடையும் பொழுது நல்வினையினையையும் விட்டு விட வேண்டும். இருவினை களும் அறும் பொழுது இறை நிழல் ஆன்மாவுக்கு வாய்க்கிறது என்பதுதான் தத்துவ நிலையாகும். திண்ணன் என்னும் ஆன்மாவைச் சுற்றி நாணன் என்னும் நல்வினையும், காடன் என்னும் தீவினையும் நிற்கிறது. பன்றியைக் கொன்று காடனிடம் ஒப் படைத்த பின்னர் திண்ணன் என்னும் ஆன்மாவுக்கு நாணன் என்னும் நல்வினை தான் மலையைக் காட்டுகிறது. குடுமித் தேவர் இருக்கிறார் என்பதையும் சொல்லுகிறது.திண்ணன் என்னும் ஆன்மாவை நாணன் என்னும் நல்வினை கூட்டிச் செல்லுகிறது ஆனால் ஒரு கட்டத்தில் நல் வினையாகிய நாணனையே ஆன்மாவாகிய திண்ணன் ஒதுக்கியே விடுவதையே காண்கிறோம். நல்வினையும் , தீவி னையும் , ஒதுக்கப்பட்ட நிலையில்த்தான் இறை வனை ஆன்மாவால் நெருங்க முடிகிறது. இறைவனின் அருளுக்கும் பாத்திரமாகவும் முடிகிறது. இவ் வாறு தான் கண்ணை அப்பிய கண்ணப்பரை நாம் பார்க்க வேண்டும்.

கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

கண்ணப்பரின் நிலைக்கு மிகவும் பொருத்தமாக இத்திருப்பாடல் இருக்கிற தல்லவா ! திண்ணன் என் னும் பெயருடன் இருந்த வேடன் , கண்டதும் தன்னை இழந்து , தன் கண்ணையே இழக்கிறான் எனும் பொழுது அவனிட த்து ஏதாவது எதிர்பாப்ர்பு இருந்திருக்கிறதா என்றால் , அங்கு எதுவுமே இல்லை என் றுதான் விடை சொல்ல வேண்டும்.' வீடும் வேண்டா விறல் ' என்பதுதான் கண்ணை அப்பிய நிலை யில் திண்ணனிடம் காணப்பட்டிருக்கிறது என்பதுதான் பொருத்தமாய் அமைகிறது.குடுமித் தேவரின் கண்ணிலிருந்து இரத்தம் வடிவதற்கு உரிய மருந்து தன்னுடைய கண்ணைப் பிடுங்கி வைப்பதுதான் என்று எண்ணினானே அன்றி , பிடுங்கி வைத்தால் தனக்கு அதனால் பெருவரமோ , அல்லது உரமோ கிடைக்கும் என்று அவன் கருதவேயில்லை.இதனால்த்தான் இறைவனாலே ஆட்கொள்ளப்பட்டு ஆறாம் நாளே முத்தியின்பத்தைப் பெறும் நிலை க்கு ஆளாகியும் விடுகிறான்.

கண்ணை அப்பிய வேடன் திண்ணன் ' கண்ணப்ப நாயனார் ' என்னும் நிலைக்கு உயர்த்தப்பட்டு அறு பத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராய் குருபூசை செய்து வணங்கும் நிலைக்கு வந்தமை என்பது எதனைக் காட்டு கிறது என்றால் அப்பளுக்கில்லா ,ஆசையில்லா அன்பின் உச்சநிலையினையே காட்டு கிறது என்பதுதான் உண் மையாகும். இதனால்த்தான் அன்பு என்று வரும்பொழுது அங்கே கைகாட்ட ப்படும் நிலை கண்ணப்பருக்கு மட் டுமே உரித்தாகி நிற்கிறது.கண்ணப்பரை அன்புக்காகக் கைகாட்டு பவர்யார் தெரியுமா அவர்தான் ' மெய்தானரும் பும் வண்ணம் ' திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமான்.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன்என்னொப்பில்என்னையும்ஆட்கொண்டருளி
வண்ணப்பணித்தென்னைவாவென்றவான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ

கண்ணப்பரை மணிவாசகர் காட்டினார். எம்பெருமானே கண்ணப்பரின் அன்பின் உயர்வினைக் காட்டுவ தாக சேக்கிழார் தரும் இச்செய்திதான் மிகவும் உச்சமான உயர்வுடை செய்தியாகும். இது ஒன்றே கண்ணப்பரைக் காட்டுவதற்குப் போதுமானதாக இருக்கும் அல்லவா !

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கம் அன்பென்றும்
அவனுடையஅறிவெல்லாம்நமையறியும்அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள்செய்வார்



# அம்பாறையில் நடைபெற்ற மக்கள் தின நிகழ்வுகள்

## கிழக்கு ஆளுநர் பங்கேற்பு

(பாறுக் ஷிஹான்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகரவால் பொதுமக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுச் செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில்இ அம்பாறை மாவட்ட செயலகத்தில் வியாழக்கிழமை மக்கள் தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில், அம்பாறை மாவட்டச் செயலாளர் சிந்தக அபேவிக்ரம, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் மற்றும் பிற பொறுப்பான நிறுவனங்களின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பொதுமக்கள் தங்கள் பிரச்சினைகளை பொறுப்பான அதிகாரிகளிடம் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்ட அதே வேளை ஆளுநர், மற்றும் மாவட்டச் செயலாளர் ஆகியோரிடமும் தங்கள் பிரச்சினைகளை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.









# பாடசாலை மாணவர்களின் மலசலகூடம் சுகாதாரமற்றவையாக காணப்படுகின்றன

## சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் டெங்கு களத்தடுப்பு நடவடிக்கை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே .மதன் தலைமையில் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் , பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் அடங்கலான குழுவினர்கள் இப்பரிசீலனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பாடசாலைகளில் டெங்கு மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான பரிசோதனைகளில் ஈடுபட்டதன் மூலம் மூன்று பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கீழ் உள்ள மூன்று பாடசாலைகளில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அங்கு உள்ள ஆண் மாணவர்களின் மலசலகூடம் மிகவும் அசுத்தமானதாகவும் மோசமானதாகவும் காணப்படுகின்றது.





மேலும் டெங்கு நுளம்புகள், நுளம்புக் குடம்பிகளும் அதிகமாக இனம் காணப்பட்ட இடங்களாகவும் பாடசாலைகள் காணப்படுகிறமையால் அப்பாடசாலைகளுக்குசிவப்புஎச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

மேலும் பாடசாலையின் சுகாதாரத்தை சீர் செய்வதற்கு மிகக் குறுகிய கால அவகாசம் வழங்கப்பட்டதுடன் அந்த குறுகிய காலத்திலும் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் அழிக்கப்படுவதுடன் மலசலகூடங்களும் சீரமைக்கப்பட வேண்டும் என இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இவற்றினை குறிப்பிட்ட காலத்தில் சிறப்பாக பேணாத பாடசாலைக்கு எதிராக வழக்குதாக்கல் செய்யப்படும் என்றும் சூழலை பராமரிக்க களத்தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சுகாதார வைத்திய அதிகாரி இதன்போது தெரிவித்தார்.

# நெல் கொள்வனவிற்காக சம்மாந்துறை அரச களஞ்சியசாலை வியாழன் திறப்பு

(தில்சாத் பர்வீஸ்)

புதன்கிழமை அரசாங்கம் அறிவித்ததைப் போன்று வியாழக்கிழமை சம்மாந்துறை நெற் சந்தை சபையின் சம்மாந்துறை கிளை திறக்கப்பட்டிருந்தது. அத்துடன், அதிகாரி ஒருவரும் அங்குள்ள காரியாலயத்தில் இருந்தார்.

மேலும், நெல் சந்தை சபையின் சம்மாந்துறைகிளையின் நெற்களஞ்சியசாலை நெல் கொள்வனவை மேற்கொண்டு சேமித்து வைக்கும் வகையில் தயார் நிலையில் இருப்பதையும் எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக எமது செய்தியாளர் சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் தெரிவித்தார்.

இதே வேளை, நிந்தவூரில் உள்ள நெற் சந்தை சபையின் கிளை மூடப்பட்டிருந்தது. நிந்தவூரில் உள்ள நெற் களஞ்சியசாலை மூடப்பட்டிருந்தது. அத்தோடு,





களஞ்சியசாலை அமைந்துள்ள பிரதேசம் காடாககாட்சியளித்துக்கொண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



# ஈச்சிலவக்கை கிராம உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

மாந்தை மேற்கு - ஈச்சிலவக்கை கிராம உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் உயிலங்குளம், அடம்பன், ஈச்சிலவக்கை ஆகிய கிராமங்களுக்கு சென்று அங்குள்ள மக்களை சந்தித்து வியாஜ"ழக்கிழமை கலந்துரையாடிய பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இதன்போது உயிலங்குளம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவை பார்வையிட்டோம். இம் மருத்துவ மனையானது பல குறைபாடுகளுடன் காணப்படுகின்றது. க்ளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் மூலம் இவ்வைத்தியசாலையை சுத்தப்படுத்தவுள்ளோம். மற்றும் மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளது. மருந்துகளை வைத்து பராமரிப்பதற்கான குளிரூட்டப்பட்ட வசதிகள் கொண்ட களஞ்சியசாலை என்பவற்றையும் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மேலும், மாந்தை மேற்கு பிரதேசத்தில் உள்ள ஈச்சலவக்கை கிராமம் மிகுந்த பின் தங்கிய கிராமமாக உள்ளது. அந்தக் கிராமத்தில் பல உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது. அதனைக் கருத்தில் கொண்டு மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவில் மூன்று கிராமங்களை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக தெரிவு செய்துள்ளோம். அதில் ஈச்சிலவக்கை கிராமமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது குடிநீர், பாதைகள், பாடசாலை, முன்பள்ளி, ஆலயங்கள் போன்ற அனைத்து இடங்களையும் அபிவிருத்தி செய்வதற்குரிய செயற்திட்ட முன்மொழிவுகளை சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு வழங்கியுள்ளோம். அதற்கான நிதியை விடுவித்து இவ்வருடத்திற்குள்ளேயே இக் கிராமத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொண்டு முடிக்கவுள்ளோம்.

ஈச்சிலவக்கை பாடசாலையில் பணிபுரியும் அதிபர், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகிறார்கள். விளையாட்டுதுறையில் இப்பாடசாலை மாணவர்கள் தேசிய மட்டம் வரை சென்று சாதனை புரிந்துள்ளார்கள். ஆசிரியர், அதிபர் ஆகியோர் விடுதிகளில் தங்கியிருந்து வேலை செய்கிறார்கள். இப் பாடசாலையில் சில வேலைகள் செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளது. அதனை செய்து முடிப்போம்.

எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் துரிதமாக இணங்காணப்பட்ட இவ் வேலைகளை செய்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்தார். 100











காலைக்கதிர் Kalaikkathir

# இண நல்லிணக்க செயற்பாட்டை மேம்படுத்தும் களப் பயணம்

(ஹஸ்பர்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் பிரிட்டிஷ் கவுன்சிலின் தலைமையில் சேர்ச் போர் கொமன்ட் ஆல் நாடளாவிய ரீதியில் எஸ்ஃடிஆர் திட்டமானது செயற்படுத்தப்படுகின்றது

எஸ்.எவ்.சி.ஜி. திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்கானது, இலங்கையில் இலக்கு வைக்கப்பட்ட ஆறு மாவட்டங்கள் மற்றும் பன்னிரண்டு பிரதேச செயலக பிரிவுகளில் முரண்பாடுகளை சாதகமான முறையில் நிலைமாற்றம் செய்யவும் மற்றும் வன்முறை அதிகரிப்பதைத் தடுக்கவும் உள்ளூர் மட்ட மாற்றுவழி பிணக்கு தீர்வு வழிமுறைகளை (ஏடிஆர் மன்றங்களை) வலுப்படுத்துதல்.

இதன் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் எஸ்.எவ்.சி.ஜி. இணைந்து விழுது ஆற்றல் மேம்பாடு மையம் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக தம்பலகாம பிரதேசம் பல் கலாசார பிரதேசமாக காணப்படுவதால் தொடர்ச்சியாக இன நல்லிணக்கமின்மை செயற்பாடுகளுகள் அதிகரித்து வருவதால் இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் செயற்பாட்டில் தம்பலகாமம் ஏடிஆர் குழு செயற்பட்டு வருகிறது.

அந்த வகையில் வியாழக்கிழமை மாற்றுவழி பிணக்கு தீர்வு குழுவினரின் ஏற்பாட்டில் தம்பலகாம பிரதேசத்தில் அமைந்துள்ள நான்கு சமயத்தவர்களின் வணகஸ்தலங்களின் கலை, கலாசார, பண்பாடுகள், மற்றும் பழக்கவழக்கங்கள் அவர்களுடைய இன நல்லிணக்கத்தை பாதிக்கும் செயற்பாடுகள் தொடர்பான விடயங்கள் என்பற்றை அறிந்து கொள்ள வியாழக்கிழமை முள்ளிப்பொத்தானை 96 இல் அமைந்துள்ள ஸ்ரீஅக்ரபோதி பௌத்த விகாரை, புஹாரி ஜும்ஆ பள்ளிவாயல் , தம்பலகாமம் ஆதி கோணஸ்வர ஆலயம் என்பவற்றுக்கு பௌத்த ,இந்து, இஸ்லாமிய ,கிறிஸ்தவ மதத் தலைவர்களின் வழிகாட்டலின் கீழ் அனைத்து மத நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் தம்பலகாம ஏடிஆர் மன்ற குழுவினர் ஒவ்வொரு சமூகத்தின் கலாசார விடயங்களைக் கற்று கொண்டதோடு இன நல்லிணக்கத்தைஊக்கப்படுத்தும்செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர்.



அத்தோடு எதிர்காலத்தில் அனைத்து சமய தலைவர்களையும் ஒன்றிணைத்து தம்பலகாம பிரதேசத்தில் இன நல்லிணக்க குழுவை உருவாக்குவதாக இதன் போது ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.



# திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலயத்தின் பொதுச் சபைக் கூட்டம்

திருகோணமலை மாவட்ட திருக்கோணேஸ்வர ஆலயத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான பொதுச்சபை ஆண்டுப்பொதுக்கூட்டம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) அன்று ஆலய அன்னதான மண்டபத்தில் மு.ப 8.30 மணிக்கு நடைபெற இருக்கிறது.

பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாக சபை கேட்டுக்கொள்கிறது.

கடந்த காலத்தில் நிலவிய அதிகார போட்டி உள்ளிட்ட பல விடயங்களை முன்வைத்து குறித்த கூட்டம் விசேடமாக இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.02.2025இல் வெளியிடப்பெற்றது